அம்பத்துார்  மாவட்ட உரிமையியல் நீதிமன்றம்

O.S.No. 83/2005

இந்த நீதிமன்றத்து உதவியாளர் திருமதி.உ. தாரணி என்பவரால் பிரமாணம் செய்விக்கப்பட்டு வாதி/ பிரதிவாதி தரப்பின் சாட்சியின் வாக்குமூலம் 1873ம் ஆண்டின் 10வது சட்டத்தில் வகை முறைகளுக்கு உட்பட்டு 2026ம் ஆண்டு  ஜுன் திங்கள் 08–ம் நாளில் பதிவு செய்யப்பட்டது.

| | |
|---|---|
| வா.சா.1 | 08.06.2026 |
| பெயர்வெற்றிசெல்வி | தந்தை/ கணவர் பெயர் |
| தொழில் | வயது |
| இனம் | சமயம் |
| கிராமம் | வட்டம் |

2,3 பிரதிவாதி தரப்பு குறுக்கு விசாரணை தொடர்ச்சி:–

1. 1991 வருடத்தில் நான் 5ம் வகுப்பு படித்துக்கொண்டிருந்ததால் வா.சா.ஆ 5 ஆவணம் பற்றி நேரடியாக தெரியவாய்ப்பு இல்லை என்றால் சரிதான். நான் ஒரு சித்தமருத்துவர் என்றால் சரிதான். வா.சா.ஆ 5 ஆவணத்தில் யார் தயாரித்தார்கள் , தட்டச்சி செய்தார்கள் என்ற விவரம் இல்லை என்றால் சரிதான். வா.சா.ஆ 5 ஆவணத்தில் முதல் பத்திரம் தயார்செய்த தேதியில் தான் 2,3 பக்கங்களும் தயார்செய்யப்பட்டது என்பதை காட்டும் குறிப்பு ஆவணத்தில் இல்லை என்றால் சரிதான். ரூ5 மதிப்பு முத்திரை தாள் பத்திரம் யார் வாங்கினார்கள்  என்றவிவரம் வா.சா.ஆ 5ல் இல்லை என்றால் சரிதான். ஸ்டேம் விற்றவர் பெயர் பி.திருமலைசாமி என்ற பெயர் முத்திரையுடன் குறிப்பு உள்ளது என்றால்

சரிதான். அதில் விற்பனை செய்ததேதி 23.11.1991 என்று உள்ளது என்றால் சரிதான்.

2. வா.சா.ஆ 5 எழுதப்பட்ட 15.11.1991 என்று குறிப்பு உள்ளது என்றால் சரிதான். வா.சா.ஆ 5 ஆவணத்தை எழுதிகொடுப்பவர் பெயர் பத்மா என்றாலும் அதில் உள்ள கையொப்பம் பத்மா என்றபெயரில் போடப்பட்டுள்ளது என்றால் சரிதான். வழக்கு தாக்கல் செய்ததில் இருந்து யார் நடத்திவருகிறார் என்றால் 2015 வருடத்தில் எனது தந்தைஇறந்துவிட்டார். 2015 வரை அவர் வழக்கை நடத்தினார். அதன் பிறகு நான் மேற்பார்வையிட்டு வந்தேன். 2015 ல் நீதிமன்றத்தில் நான் தான் சாட்சியம் அளித்தேன் என்றால் சரிதான். பி.சா.ஆ 12 வழக்கறிஞர் அறிவிப்பு 16.10.2017 தேதியிட்டது எனக்கு கிடைக்கப்பெற்றது என்றால் சரிதான்.

3. இந்த வழக்கில் பிரதிவாதி சாட்சியை எனதுதரப்பு வழக்கறிஞர் என்னிடம் ஆலோசனை செய்து விவசாரணை செய்தார் என்றால் சரிதான். பிரதிவாதி குடும்பத்தில் பத்மா என்பவர் பத்மாவதி என்று அழைக்கப்படுவார் என்ற விவரம் எனக்கு தெரிந்து தான்எனது தரப்பில் வழக்கறிஞர் குறுக்கு விசாரணை செய்தார் என்றால் சரிதான். நாங்கள் வழக்கு சொத்தில் ஆக்கிரமிப்பு செய்துள்ளோம் என்று அதனை அகற்றவேண்டும் என்றும் பிரதிவாதிகள் அ.வ.எண்424/2006 தாக்கல் செய்து அதை இந்த வழக்குடன் சேர்ந்து விசாரிக்கப்பட்டு வருகிறது என்றாலும் அ.வ.எண.424/2006 ல் இந்த பிரதிவாதி ஆவணமாக பட்டாவை தாக்கல் செய்துள்ளதால் பிரதிவாதி பெயரில் 2006 வருடத்தில் பட்டா உள்ள விவரம் எனக்கு தெரியும் என்றால் சரிதான்

4. எங்களுடைய ஆக்கிரமிப்பு சம்மந்தமாக காவல்நிலையத்தில்

பிரதிவாதிகள் பி.சா.ஆ 3 புகார் கொடுத்தபோது பி.சா.ஆ 4CSR ஆவணம் பிரதிவாதிகளுக்கு கொடுக்கப்பட்டு சிவில் வழக்கு என்பதால் நீதிமன்றத்தில் பார்த்துக்கொள்ளும்படி சொன்னார்கள். பத்மாவதி என்போது இறந்தார் என்றால் ஞாபகம் இல்லை. பத்மாவதி இறந்த விவரம் எனக்கு தெரியும். என்னிடம் காட்டப்படும் பி.சா.ஆ 8 பத்மாவதி இறப்பு சான்றிதழில் அவர் இறந்த தேதி 27.06.2002 என்று குறிப்பு உள்ளது என்றால் சரிதான்.

5. எனக்கு பத்மாவதி என்பவரின் உண்மையான பெயர்தெரியாமல் பத்மா என்று ஆவணம் மற்றும் வழக்கில் குறிப்பிட்டுள்ளேன் என்றால் சரியல்ல. பிராது B Schedule Property பத்மாவதி என்பவர் உயிருடன் இருந்தகாலத்திலும் அவர் இறந்தபிறகும் 1 முதல் 3 பிரதிவாதிகள் சுவாதினத்தில் தான் இருந்தது என்றால் சரியல்ல. வாதி B Schedule Property சொத்தில் 150 சதுரஅடி ஆக்கிரமிப்பு செய்துள்ள சொத்தை தவிர மற்ற சொத்து பிரதிவாதிகள் சுவாதினத்தில் தான் உள்ளது என்றால் சரியல்ல. 1ம் பிரவதிவாதி வெங்கடேசன் 07.11.2008 அன்று இறந்துவிட்டார் என்றால் சரிதான். என்னிடம் காட்டப்படும் பி.சா.ஆ 2 ஆவணம் B Schedule Property யை 11.04.2005 அன்று 1ம் பிரதிவாதி, 2 மற்றும் 3ம் பிரதிவாதிகளுக்கு பதிவு செய்யப்பட்ட தானசெட்டில்மென்ட் கொடுத்துள்ளார்கள் என்றால் சரிதான்.

6. நான் வா.சா.ஆ 5 கிரையபத்திரம் வைத்துதான் நிரந்தர உறுத்துக்கட்டளை பரிகாரம் கோருகிறேன் என்றால் சரிதான். வா.சா.ஆ 5 தவிர வேறு எந்த ஆவணமும் B Schedule Property சம்மந்தமாக நான் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். வா.சா.ஆ 5 ஏற்படுத்திய 1991 காலத்தில் இருந்து பத்மாவதி இறந்த 2002 காலம் வரை இடையிட்ட 11 வருடகாலத்தில் வாதி கிரையஆவணம் ஏற்படுத்தி தருமாறு எடுத்த

நடவடிக்கை சம்மந்தமாக ஆவணம் எதுவும் உள்ளதா என்றால் ஆவண ஆதாரம் எதுவும் இல்லை. வாய்மொழியாக தான் பேசிக்கொண்டோம்.

7. எனது பிராதில் அவ்வாறு வாய்மொழியாக பேசிக்கொண்டதை பற்றி பத்மாவதி என்பவரிடம் குறிப்பிட்ட தேதியில் குறிப்பிட்ட முறையில் கேட்டோம் என்று எந்த குறிப்பும் இல்லை என்றால் சரிதான். தற்போது வழக்கிற்காக நடக்காத ஒன்றை சொல்கிறேன் என்றால் சரியல்ல. வா.சா.ஆ.5 ஆவணம் பொய்யாக தயார்செய்த ஆவணம் என்றால் சரியல்ல. வா.சா.ஆ 5 ஆவணத்திற்கு எந்த சாட்சியமும் கிடையாது என்றால் சரியல்ல. அதன் மூலம் எனக்கு எந்த சுவாதினமும் ஒப்படைக்கப்படவில்லை என்றால் சரியல்ல. பதியப்படாத ஆவணம் மூலம் உரிமை மாற்றம் ஏற்படாது என்ற விவரம் எனக்கு தெரியுமா என்றால் தெரியாது. தற்போது ஸ்டேம் டியுட்டி கட்டியது Guide line value பிரகாரம் கட்டப்பட்டுள்ளது என்றாலும் வழக்கு தாக்கல் செய்தபோது இருந்த மார்கட் வேலியு பிரகாரம் கட்டவில்லை என்றாலும் சரியல்ல. அசல் உரிமையாளருக்கு எதிராக நிரந்தர உறுத்துக்கட்டளை பரிகாரம் கோரமுடியாது என்றாலும் சரியல்ல. நான் Declaration or specific performance Suit எதுவும் தாக்கல் செய்யாததால் நான் கோரும் பரிகாரம் கிடைக்ககூடியது அல்ல என்றால் சரியல்ல. பிரதிவாதியின் 150 சதுரஅடி சொத்தை பிரதிவாதிகளிடம் ஒப்படைக்க நான் கடமைப்பட்டுள்ளேன் என்றால் சரியல்ல. அ.வ.எண்424/2006 பிராதுபடி தீர்ப்பாக வேண்டும் என்றாலும் அ.வ.எண்83/2005 வழக்கு தள்ளுபடி செய்யப்படவேண்டும் எனறாலும் சரியல்ல

இத்துடன் குறுக்கு விசாரணை முடித்துக்கொள்ளப்படுகிறது, மறு விசாரணை இல்லை.